1987 ஏப்ரல் 28]

தமிழக அரசு அலுவலகங்களில் தமிழ் ஆட்சி மொழி.

521—(*வினா எண். 3340) மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தலைமைச் செயலகம், மாவட்ட, வட்ட அலுவலகங்களில் அலுவல்கள் முழுமையும் தமிழ் ஆட்சி மொழியிலேயே அமைய கால வரையறை நிர்ணயிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, தலைமைச் செயலகம், அரசின் துறைகள், சார்பு நிறுவனங்கள், மாநகராட்சிகள், வாரியங்கள், கழகங்கள், மற்றும் கூட்டுறவு இணையங்கள் அனைத்திலும் தமிழ் ஆட்சி மொழித் திட்டத்தை விரிவுபடுத்திட 31—10—1986 அன்று ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட்ட, மாவட்ட அளவிலே இருக்கிற அலுவலகங்களில் ஒரு தேதியைக் குறிப்பிட்டு, அந்தக் காலக் கெடுவிற்குள் ஆட்சி மொழியாகத் தமிழை நிருவாகத்தில் கொண்டு வர உத்தரவிட்டு இருந்தாலும், பல அலுவலகங்களில் பாதி தமிழிலும், மீதியை ஆங்கிலத்திலும் உத்தரவுகளை—பொதுமக்களுக்கு எழுதுகிற கடிதங்களுக்குக் கூட—இன்னும் எழுதிக் கொண்டிருக்கிறார்கள். சில அலுவலகங்களில் இதுபற்றிக் கேட்கிறபோது, தமிழ்த் தட்டச்சு இயந்திரங்கள் போதிய அளவில் இல்லாமல் இருக்கிற காரணத்தால் நாங்கள் செய்யவில்லை என்ற விவரங்களைச் சொல்லுகிறார்கள். எனவே மாநிலம் முழுவதும் இருக்கிற எல்லாத் துறைகளிலும், ஆய்வு நடத்தி, தமிழ்த் தட்டச்சு இயந்திரத்தை வழங்குவதற்கு அரசு விரைவாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, போதிய அளவிற்குத் தமிழ்த் தட்டச்சுப் பொறிகளை வழங்கு வதற்கு அரசு ஏற்கெனவே ஆணையிட்டு இருக்கிறது; தக்க நடவ டிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழிலே சிறந்த கோப்புகளை எழுதுவதை ஊக்கு விப்பதற்கு, அரசு ஊழியர்களுக்குப் பரிசுத் திட்டம் ஒன்றை வைத்திருந்தது. இருந்தாலும் கூட, இந்தப் பரிசுத் திட்டம் மாவட்ட அளவிலே யாருக்காவது ஒருவருக்கு அல்லது இரண்டு பேர்களுக்கு என்று வழங்கும் நிலைமையிருக்கிறது. எனவே, தமிழிலே கோப்புகளை உருவாக்குகிற முறையும், உத்தரவுகளை வெளியிடுகிற முறையும், அரசு ஊழியர்கள் மத்தியில் ஊக்குவிப்ப தற்காக வட்ட அளவிலே என்று எடுத்து, வட்ட அளவிலே கூட ஒவ்வொரு துறைக்கும் பரிசு கொடுத்து, அவர்களை ஊக்குவிக்கிற திட்டத்தை அரசு செயற்படுத்துமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் ஆட்சி மொழித் திட்டத்தைப் பொறுத்தவரைக்கும் வட்ட அளவிலே ஏற்கெனவே செம்மையாக செயற்பட்டு வருகிற காரணத்தால் அதற்கு மேற்பட்ட அளவிலே இந்த ஊக்குவிப்பு தேவை என்ற கருத்தை தமிழ் வளர்ச்சி பண் பாட்டுத் துறை கூறியதையொட்டித்தான் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருடைய ஆலோசனையையும் அரசு ஆயும்.

மானாமதுரை அரசு பெண்கள் உயர்நிலைப்பள்ளி.

522—(*வினா எண். 6617) திரு. க. பாரமலை: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மானாமதுரையிலுள்ள அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தும் செயற் குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?